

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (22.09.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி கடற்படைப் பகுதிகளின் கடற்படை அலுவலர் ரியர் அட்மிரல் (Flag Officer Commanding Tamil Nadu & Puducherry) சதீஷ் ஷெனாய் அவர்கள் சந்தித்து பேசினார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், கடற்படை கமாண்டர்கள் ஆர். நிர்மல் குமார், எஸ். ஜெகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (22.09.2025) தலைமைச் செயலகத்தில், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறையின் செயல்பாடுகள் குறித்தும், சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எஸ்.இரகுபதி, சு. முத்துசாமி, எஸ்.எஸ்.சிவசங்கர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.9.2025) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், சமூகநீதி பள்ளி மாணவர் விடுதிக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்து, 8 சமூகநீதி விடுதிக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார். உடன் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், உயர் அதிகாரிகள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்திய மற்றும் தேசிய, மாநில அளவில் சிறந்து விளங்கிய விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவிகித விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் 4 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, அரசு உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.09.2025) தலைமைச் செயலகத்தில், முன்னாள் இலங்கை அமைச்சர் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஆ.ஜீவன் குமாரவேல் தொண்டமான் எம்.பி. குடும்பத்தினருடன் சந்தித்து தனது திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.9.2025) தலைமைச் செயலகத்தில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடங்களை திறந்து வைத்தார். உடன் தலைமைச் செயலாளர் முருகானந்தம், உள் துறை செயலாளர் தீரஜ்குமார், டி.ஜி.பி. (பொ) ஜி.வெங்கடராமன் , அரசு உயர் அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.09.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாகத் தெரிவு செய்யப்பெற்ற 13 நபர்களுக்கு தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், துறை அதிகாரிகள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.9.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் 1231 கிராம சுகாதார செவிலியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி, வாழ்த்தினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர், அரசு அதிகாரிகள் உடன் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.9.2025) தலைமைச் செயலகத்தில், அரசு கள்ளர் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் நலன் கருதி ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். உடன் அமைச்சர் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.09.2025) முகாம் அலுவலகத்தில், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டி.எம். அரியப்பன் பேரனுக்கு "இனியன்" என்று பெயர் சூட்டினார். உடன் அவரது குடும்பத்தினர் உள்ளனர்.

### திரைத்துறைக்கு தொடர்ந்து ஊக்கமும் நம்பிக்கையும் வழங்கி வரும்

# முதல்வர் - துணை முதல்வருக்கு தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பில் நன்றி!

## சங்க 69 ஆம் ஆண்டு பேரவைக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, செப். 23 - தென்னிந்திய நடிகர் சங்கத்தின் 69 ஆம் ஆண்டு பேரவைக்கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு

பாரம்பரியமிக்க நமது தென்னிந்திய நடிகர் சங்கத்தின் வளர்ச்சிக்காகவும், உறுப்பினர் நலனுக்காகவும் அனைத்து வகையிலும் ஆதரவளித்து உறுதுணையாக இருந்து, சென்னையை அடுத்த பையனூரில் குடியிருப்புகள் கட்ட ஒதுக்கப்பட்ட குத்தகை நிலத்தின் பயன்பாட்டை கூடுதலாக மூன்று ஆண்டுகளுக்கு நீட்டித்து புதிய அரசாணை வழங்கி, திரையரங்குகளில் வெளியிடப் படும் தமிழ்த் திரைப்ப டங்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளால் வசூலிக்கப்படும் கேளிக்கை வரியை 8% இருந்து 4% ஆக குறைத்து அரசாணை வெளியிட்டு, பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த திரைப்படங்களுக்கான தமிழ்நாடு அரசு விருதுகளை வழங்கும் பொருட்டு விருதுக்குழு ஒன்றை அமைத்து திரைத்துறைக்கு தொடர்ந்து ஊக்கமும், நம்பிக்கையும் வழங்கி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், சங்க உறுப்பினரும் தமிழ்நாடு துணை முதலமைச்சரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், வருவாய்த் துறை அமைச்சர் K.K.S.S.R. ராமச்சந்திரன் அவர்களுக்கும் செய்தி மக்கள் தொடர்புத்துறை மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்களுக்கும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு செயலாளர்களுக்கும், அரசுத் துறை இயக்குனர்களுக்கும் மற்றும் அரசுத்துறை அதிகாரிகளுக்கும் தென்னிந்திய நடிகர் சங்கம் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவிக்கும் தீர்மானத் திற்கு பேரவையின் ஒப்புதல் பெறப்பட்டு தீர்மானமாக நிறை வேற்றப்பட்டது.

தமிழ்நாடு திரைப்படத் துறைக்கான நல வாரியங்களில், மாற்றுத் திறனாளி கலைஞர்களை, பிரதிநிதித்துவப்படுத்தும் வண்ணம் வாரிய உறுப்பினர் பொறுப்பு வழங்கிட வழிவகை செய்ய வேண்டுமென தமிழ்நாடு அரசிடம் கோரிக்கை யை முன்வைக்க பேரவையின் ஒப்புதலோடு தீர்மானம் நிறைவேற்றப் படுகிறது.

தென்னிந்திய நடிகர் சங்கத்தில் 2025-2026-ஆம் ஆண்டுக்கான சங்க கணக்குத் தணிக்கையாளராக ஸ்ரீராம்சுந்தர், SRNR & அசோசியேட்ஸ் அவர்களை நியமிக்க பேரவையின் ஒப்புதல் பெறப்பட்டு தீர்மானமாக நிறை வேற்றப்பட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



அமைச்சரும். சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில், கொளத்தூர் தொகுதி வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இதில் மேயர் ஆர்.பிரியா, அதிகாரிகள் கணேசன், எச்.ஆர்.கௌஷிக், கௌரவ் குமார், மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ் குமார், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.